செ.வெ.எண்: 135 நாள்: 08.12.2020

## பத்திரிக்கைச்செய்தி

# நுண்ணீர்ப்பாசனத்திட்டம்

தமிழ்நாடு நீர்ப் பற்றாக் குறையுள்ள மாநிலம் என்பதால், கிடைக்கும் பாசன நீரினை சிக்கனமாக பயன்படுத்திடவும், குறைந்த நீரில் அதிக பரப்பில் சாகுபடி மேற்கொண்டு விவசாயிகள் அதிக விளைச்சல் எடுக்க வேண்டும் என்ற நோக்கத்திற்காகவும், சொட்டு நீர் மற்றும் தெளிப்பு நீர்ப்பாசனம் போன்ற நுண்ணீர்ப் பாசன முறைகளை தமிழக விவசாயிகளிடையே பிரபலப்படுத்துவதற்காக தமிழ்நாடு அரசு பல்வேறு சீரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக நுண்ணீர் பாசன அமைப்புகளை உருவாக்குவதற்கு சிறு /குறு விவசாயிகளுக்கு முழு மானியமும், பிறவிவசாயிகளுக்கு 75 சதவிகிதமானியமும் அளித்துவருகிறது.

தென்காசி மாவட்டம் தோட்டக்கலைத்துறைக்கு பிரதம மந்திரி நுண்ணீர்ப்பாசன திட்டத்தில் பொருள் இலக்காக 3404 ஹெக்டேரும் இதற்காக ரூ.23.83 கோடி நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டுள்ளது.

சொட்டு நீர்ப்பாசனம் அமைப்பதனால் பயிர்களுக்கு தேவையான நீரை, துளித்துளியாக பயிர்களின் வேர்ப்பகுதியில் நேரடியாக வழங்குவதால் குறைந்தபட்சம் 75 சதவீதம் முதல்அதிகபட்சம் 85 சதவீதம் வரை நீரை சேமித்திடலாம்.

மேலும், சொட்டு நீர்ப்பாசனத்தில் பயன்பெறு கின்ற விவசாயிகள் கூடுதலாக துணை நீர் மேலாண்மை திட்டத்தில் ஆழ்துளைக்கிணறு அமைத்தல் (நிலத்தடி நீர் மட்டம் பாதுகாப்பாக உள்ள குறு வட்டங்களுக்குமட்டும்), மின்மோட்டார் / பம்புசெட் நிறுவுதல், PVC குழாய்கள் பதித்தல் மற்றும் நீர்த்தேக்க தொட்டி (114 கனஅடி) ஆகியன 50% மானியத்தில் அமைத்து பயன் பெறலாம்.

பாசன நீர் வசதி ஏதும் இல்லாத இடங்களில் பாசன நீர் ஆதாரங்களை உருவாக்கி, விவசாயிகள் நுண்ணீர்ப்பாசன முறையில் சாகுபடி மேற்கொள்வதற்கு துணை நிலை நீர் மேலாண்மைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ், நுண்ணீர்ப்பாசன முறையினை அமைப்பதற்கு முன் வரும் விவசாயிகளை மேலும் ஊக்குவிக்கும் வகையில், நுண்ணீர்ப்பாசன முறைக்காக வழங்கப்படும் மானியம் மட்டுமல்லாது, குழாய்க்கிணறு / துளைக்கிணறு அமைக்கவும் நீரினை இறைப்பதற்கு ஆயில் இன் ஜின் / மின் மோட்டார் வசதி ஏற்படுத்தவும், பாசன நீரினை வீணாக்காமல் வயலுக்கு அருகில் கொண்டு செல்வதற்கு பாசனநீர் குழாய்களை நிறுவவும், தரை நிலை நீர்த்தேக்கத் தொட்டிஅமைத்தல் போன்ற துணை நிலை நீர் மேலாண்மைப் பணிகளுக்காகவும்

மானியம் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் தென்காசி மாவட்டத்திற்கு குழாய்க்கிணறு / துளைக்கிணறு அமைக்க 160 எண்களும், டீசல்பம்புசெட் / மின்மோட்டார் பம்புசெட் அமைக்க 499 எண்களும், நீர்பாசனகுழாய் அமைக்க 1362 எண்களும், நீர்த்தேக்க தொட்டி அமைக்க 110 எண்களும் இலக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

குழாய்க்கிணறு / துளைக்கிணறு அமைப்பதற்கு செலவிடப்படும் தொகையில் 50 சதவிகிதம் அதிகபட்சமாக ரூ.25,000/–ம், டீசல்பம்புசெட் / மின்மோட்டார் பம்புசெட் நிறுவுவதற்கு அதன் விலையில் 50 சதவீதத் தொகை, ரூ.15,000/–த்திற்கு மிகாமலும், வயலுக்கு அருகில் பாசன நீரினை கொண்டு செல்லும் வகையில் நீர்பாசன குழாய் அமைப்பதற்கு 50 சதவீதத் தொகை எக்டருக்கு ரூ.10,000/–க்கு மிகாமலும், பாதுகாப்பு வேலியுடன் தரைநிலை நீர்த்தேக்கத் தொட்டி நிறுவுவதற்கு, அதற்காகும் செலவில் 50 சதவீதத் தொகை ஒரு கன மீட்டருக்கு ரூ.350/–க்கு மிகாமலும் நிதி உதவி ஒரு பயனாளிக்கு ரூ.40,000/–க்கு மிகாமலும் வழங்கப்பட்டு வருகிறது.

மேற்கண்ட பணிகளுக்கான மானியம், நுண்ணீர் பாசன முறையினை பின்பற்றுவதற்கு முன்வரும் விவசாயிகளுக்கு மட்டுமே வழங்கப்படும். இத்திட்டத்தில் பயன்பெற விரும்பும் விவசாயிகள் வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகங்களைஅணுகி கூடுதல் தகவல்கள் பெற்று பயன் பெற்றுக்கொள்ளலாம்.

## நுண்ணீர்ப்பாசனதிட்டம் மூலம் பயனடைய பொன்னானவாய்ப்பு!

தென்காசி மாவட்டம் தோட்டக்கலைத்துறைக்கு பிரதம மந்திரி நுண்ணீர்ப்பாசன திட்டத்தில் பரப்பு இலக்காக 3595 ஹெக்டரும் இதற்காக ரூ.25.17 கோடிநிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டுள்ளது. ஆகவே இம்மாவட்டத்தில் தோட்டக்கலை பயிர்களை பயிரிடும் விவசாயிகள் அனைவரும் இத்திட்டம் மூலம் சொட்டு நீர்ப்பாசனம், தெளிப்பு நீர்ப்பாசனம் அமைத்துப் பயன்பெற்றிடகேட்டுக்கொள்ளப்படுகிறது.

## துணைநீர் மேலாண்மை (SWMA)

மேலும், சொட்டு நீர்ப்பாசனத்தில் பயன்பெறுகின்ற விவசாயிகள் கூடுதலாக துணைநீர் மேலாண்மை திட்டத்தில் ஆழ்துளைக் கிணறு அமைத்தல் (நிலத்தடிநீர்மட்டம் பாதுகாப்பாக உள்ள குறுவட்டங்களுக்குமட்டும்), மின் மோட்டார் / பம்புசெட் நிறுவுதல், PVCகுழாய்கள் பதித்தல் மற்றும் நீர்த்தேக்கதொட்டி (114 கனஅடி) ஆகியன 50%மானியத்தில் அமைத்து பயன்பெறலாம்.

இத்திட்டம் தொடர்பான விரிவான விவரங்களுக்கு உரியஆவணங்களுடன் தங்களது வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகங்களை அணுகுமாறு தென்காசி மாவட்ட தோட்டக்கலை துணை இயக்குநர்திருமதி. சு.ஜெயபாரதிமாலதி அவர்கள் அன்போடு கேட்டுக்கொண்டுள்ளார்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தென்காசி.